# ஆயர் மடல்......

**கி**றிஸ்துவுக்குள் அன்பானவர்களே *!!!*

**வ**ருடாந்திர அறுவடை பண்டிகையில் நீங்கள் உற்சாகமாக பங்கெடுத்து செயலாற்றியது என்னை வியக்க வைத்தது! ஆச்சரியப்பட வைத்தது*!*

கர்த்தரை கனப்படுத்திய உங்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

இன்று முதல் 'அடவெந்து' (Advent) என்ற ஆண்டவரின் வருகையின் காலம் துவங்கி விட்டபடியால் "கிறிஸ்துமஸ்" பண்டிகையை கொண்டாட நம்மையும் நம் குடும்பங்களையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுவோம்.

Let us prepare ourselves in the season of Advent to celebrate the birth of our Lord Saviour and also let us enter in the New Year 2018 with Great faith.

**"Merry Christmas" & " Happy New Year 2018"**

உற்சாகத்தோடு எல்லா X'mas programme லும் பங்கெடுக்க*!* செயலாற்ற*!* X'mas, பத்தாண்டை கொண்டாட உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கும்

உங்கள் ஆயர்
அருள்திரு. கிறிஸ்டோபர் ராஜேந்திரன்.

May your Christmas sparkle with moments of love, *laughter* and goodwill, And may the year ahead be full of contentment and joy.Have a

**"Merry Christmas"**

# Meditation ( தியானம்)

தியான வசனம்: (St. Luke) பரி: லூக்கா 2:11

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."

*"For unto is born this day in the city of David a Saviour , which is Christ the Lord"*

அன்புக்குரியவர்களே

## *Christmas & New Year 2018 Greetings.*

*'Christmas'* என்றாலே 'கிறிஸ்துவுக்கு ஆராதனை' என்று பொருள். இந்த உலகில் எத்தனையோ மனிதர் பிறந்திருக்கிறார்கள். ஆராதனைக்கு, தொழுகைக்கு, பாத் திரராக யாரும் இருக்க் முடியாது. காரணம் நாம் மனிதர்கள், ஆராதனை செய்பவர்கள். ஆனால் இயேசுவோ மனிதனாகப் பிறந்தாலும், 100% மனிதனாகவே இருந்தாலும்! அவர் 100% தேவனாகவும் இருந்தார், இருக்கிறார், இருந்து கொண்டு இருப்பார். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாத தேவனாகவும், மனிதனாகவும் இருக்கிற 'புதிய மனிதன்".

இந்த *New Man* ன் பிறப்பும்! பதிய ஆண்டின் *(New Year)* பிறப்பும் சேர்ந்தே பார்க்கப்பட்டு, புதிய சமுதாயத்தின் 'புதிய விடியலாக' பார்க்கப்படுகிறது. தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள முடியாத ஒரு மரண பயத்தில் பாவ அடிமைத் தனத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த மனித சமுதா யத்தை இரட்சிக்க! இரட்சகனாகவும் *(Saviour)* மீட்க! மீட்பராகவும் *(Deliveror)* மனித கண்களினால் காண முடியாத அரூபியாக இருந்த தேவாதி தேவனையும்! அவரது அளவற்ற அன்பையும் அவரது வல்லமையையும் வெளிப் படுத்துகிற 'புதிய தேவ மனிதனாக' இயேசு பிறந்தார்.

இதைத்தான் பரி.லூக்கா 2:11ல் உலகத்தை இரட்சிக்க

வந்த இரட்சகர் இயேசுவின் பிறப்பு என்று எழுதப்பட் டிருக்கிறது. ஊலக இரட்சகரின் பிறப்பு இந்த உலகத்திற்கு ஒரு மாபெரும் நம்பிக்கையையம் மனித வாழ்விற்கு ஒரு அர்த்தத்தையும் கொடுக்கிற புதிய விடியலின் பிறப்பு. *Actually X'mas is a New beginning in Human History.* ஆவியாயிருக்கிற தேவன் மனிதனாகப் பிறப்பது அதுவும் தாழ்மை கோலத்தில் ஒரு ஏழை குடும்பத்தில் எளிய ஒரு குழந்தையாக பிறப்பது என்பது மனித குல வரலாற்றில் மாபெரும் அதிசயம். அதவும் 'கன்னி வயற்றில்' பிறந்தது *the Unique Supernatural Event in the history.*

"மாபெரும் கடவுள்" எளிய குழந்தையானார்

*X'MAS* ல் *X'mas* மனித வாழ்கையை எல்லா வற்றுக்கும் மேலாக உயர்த்தியிருக்கிறது. கடவுள் இயேசு கிறிஸ்துவில் மனிதனானது, மனிதனுடைய மதிப்பையும் *(Self Esteem),* மரியாதையையும் கூட்டி இருக்கிறது. மனிதன் மற்ற உயிர் களைப் போல மிக சாதரணமாக படைக்கப் பட்டவனல்ல! தேவசாயலாகப் படைக்கப்பட்டவன் என்ற வேத சத்தியத்தின் வார்த்தை எவ்வளவு பெரிய உண்மை என்பதை *X'mas* நிரூபித்திருக்கிறது. *X'mas elevates Humanity to the Greatest height.* ஆதலால் *X'mas* பண்டிகையை மிக சிறப்பாய் கொண்டாடுவது ஒவ்வொரு மனிதனின் மாபெரும் கடமை.

*As human let us Express our gratitude by celebrating X'mas Jubilantly ! Joyfully. ! Let us experience X'mas and Enjoy X'mas in a New way.*

*As believers in Christ As born again Christians*

*Let us pre pare ourselves to celebrate X;mas and New year 2018 with Great faith.*

Merry X'mas ! Happy New Year.

உங்கள் ஆயர்.

***Rev. M. C. Rajendran.***

## *Projects for December:*

**Congregation:** Write about your celebration of "Christmas & New Year" in one page ( Your personal experience)How did you celebrate in a meaningful and Joyful way ?

**Women's fellowship:** Discus about the New and Meaningful way of X'Mas and New year Celebrations.

**Men's Felloship:** Discus about the New and Meaningful way of X'Mas and New year Celebrations.

**Youth Fellowship:** Discus about the New and Meaningful way of X'Mas and New year Celebrations.

**Junior Church:** Draw Nativity Scene in a creative/ New way.

## Women's Fellowship

அன்புக்குரிய தாய்மார்களே!

கிறிஸ்துமஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டி ருக்கிறோம். கொண்டாட்டம் எனறாலே பெண்களின் பங்கு மிகப் பெரிது. கிறிஸ்துவின் பிறப்பில் பரியாளின் பங்கு எவ்வளவு முக்கியமாக கருதப்படுகிறதோ! அது போல தாய்மார்களின் பங்கும் ஒரு அர்த்த முள்ள கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை கொண்டாட முக்கியமானதாக இருக்கிறது.

ஆதலால் புறம்பான ஆயத்தங்களோடு ஆவிக்கரிய ஆயத்தங்களையும் நாம் பொறுப்பாக செய்து இந்த கிறிஸ்துமஸ் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுவோமாக.

உங்கள் ஆயரம்மா,
ஏஞ்சல் கிறிஸ்டோபா

## செயலரிடமிருந்து..........

**இ**றைமகன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாமத்தில் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் நம்மையும் நம் திருச்சபையையும் அற்புதகரமாக வழி நடத்தி வந்த நம் தேவாதி தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

கடந்த மாதம் நமது திருச்சபைக்கு மிகவும் முக்கியமான மாதமாக அமைந்தது. 3-11-17 அன்று **Most Rev. Thomas K. Oommen** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பு செய்தி தந்தது மிகவும் ஆசீர்வாதக அமைந்தது என நம்புகிறேன். மேலும் அன்றய ஆராதனை திடப்படுத்தல் ஆராதனையாக அமையவம் நமது திருச் சபையின் அங்கத்தினர்களான **Mrs**. அனிதா சுரேஷ், Mr. ஜாண் முருகன், Miss. ஏஞ்சலின் சோபியா நெல்சன், Miss. தினியா சண்ஷைன் ராஜவேல், Master. ஜெஸ்வின் போஸ் செல்வகுமார் ஆகியோர் புதிதாக திருமுழுக்கு பெறவும் தேவன் கிருபை புரிந்தார். மேலும் இந்த ஆராதனையில் Rev. Biju Epen, CSI Malayalam, Al Ain, Rev. T.K. Kuruvilla, CSI Malayalam, Dubai, அகியோர் தங்களது சபை மக்களோடு கலந்து கொண்டது வருங்காலங்களில் திருச்சபைகளின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமாக அமையும் என்று நம்புகிறேன்.

மேலும் 10-11-17 அன்று நடைபெற்ற நமது திருச்சபையின் அறுவடை பண்டிகை மிகவும் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை புரிந்தார். இன்னும் அந்த நாளின் ஒவ்வொரு காரியங்களும் சிறப்பாக நடைபெற ஒற்றமையோடு செயல் பட்ட நமது ரோபதகர் சபைக்கழு அங்கத்தினர் இன்னும் திருச்சபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன். மேலும் வரும் காலங்களிலும் நமது திருச்சபையின் முன்னேற்றத்திற்கான ஒவ்வொரு காரியங்களிலும் நாம் ஒவ்வொருவரும் இணைந்து செயல் செயல்படுவோம் தேவன் நம்மையும் நம் திருச்சபையையும் ஆசீர் வாதத்தின் பாதைக்கு நேராக வழி நடத்தவார். அது போல நம்மை உற்சாகப் படுத்தும் வண்ணமாக அந்நாளில் நம்மோடு கலந்து கொண்ட பிற திருச்சபையின் போதகர் மற்றும் சபை மக்கள் ஒவ்வொருவருக்கும் நம் நன்றிகளைக் கூறுவோம்.

டிசம்பர் மாதம் நமக்கு மிகவும் மக்கியமான மாதம். இந்த மாதத்திலே நாம் திருச்சபையில் அனுசரிக்கத் திட்டமிட்டிருக்கிற ஒவ்வொரு ஆரா

தனையும் சிறப்பாக அமைய ஜெபிப்போம் பங்கு பெறுவோம். தேவன் ஆசீர்வாதமாக்கித் தருவார் ன்றெு விசுவாசிப்போம்.

***WISH YOU ALL A***




*M.Nesamony.*

## ஏன் பிறந்தார் இயேசு?

**"அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்."**

**இ**ன்று அனேக அரசியல் தலைவர்களின் பிறந்த நாட்களை தொண்டர்கள் கொண்டாடுகின்றனர். அந்த தொண்டர்கள் அந்தந்த தலைவர்களின் கொள்கைகளை ஏற்று, அந்த தலைவர்களின் பாதை சரியோ தவறோ அந்த பாதையில் நடக்கின்றனர். சினிமா நடிகர்களின் பிறந்த நாளை ரசிகர்கள் கொண்டாடுகின்றனர். சினிமா நடிகர்களின் ஸ்டைலையும் அவர்களின் கலாச்சாரங்களையும், நடை உடை பாவனைகளையும் ரசிகர்கள் பின்பற்றுகின்றனர். ஆனால் நம்முடைய பாவங்களுக்காக இந்த பூமியல் மனுவாக பிறந்த கர்த்தராகிய கிறிஸ்துவின் பிறந்த நாளை ஆண்டுதோறும் கிறிஸ்மஸ் பண்டிகை என்று கொண்டாடும் கிறிஸ்தவர்களாகிய நாம் எத்தனைபேர் அவருடைய வழியில் நடக்கும் உணர்வோ, அவருடைய பரிசுத்த முன்மாதிரியைப் பின்பற்றும் ஆர்வமோ அறவே கிடையாது.

புதுப் புது ஆடைகள் உடுப்பதற்க்கும், வித விதமாய் விசேஷ அயிட்டங்களை உண்பதற்க்கும், பலவித பொழுது பேக்கு காரியங்களில் ஈடுபடுவதற்க்கும். ஒரு வாய்ப்பாக கிறிஸ்துவன் பிறப்பை எடுத்துக் கொள்கிறோமேயன்றி, அவர் ஏன் பிறந்தார்! எதற்க்காக பிறந்தார், அவரோடு நமக்கு என்ன உறவு? ஆவரால் நாம் பெற்ற

நன்மைகள் என்ன? அவரால் நமக்கு ஏற்ப்பட்ட நலமான பாதிப்புகள் என்னென்ன? என்பதையெல்லாம் நாம் ஒருவர்கூட எண்ணிப்பார்பது கிடையாது. இயேசுவின் பிறப்பை நினைத்து கொண்டாடி மகிழவிரும்பும் எவரும் அவர் ஏன் எதற்க்காக பிறந்தார்? அவர் பிறந்ததினால் ஏற்ப்பட்ட மேன்மையான விளைவுகள் என்ன? என்ற கேள்விகளை நமக்குள் நாமே கேட்கவேண்டும்.

ஒருவருடைய பிறந்தநாள் அவரோடு நெருங்கிய உறவுடைய ஒருவருக்குத் தானே மிகவும் முக்கியமானது. இயேசுவோடு உறவையும் ஐக்கியத்தையும் ஏற்ப்படுத்துவது எது? இயேசு கல்வாரி சிலுவையில் மனுக்குலத்தின் பாவங்களுக்காக இரத்தம் சிந்தி உருவாக்கிய பாவமன்னிப்பையும், இரடச்சிப்பினையும், தனிப்பட்ட வாழ்வில் பெறுவதன் மூலமாகவே நாம் அவருடன் ஐக்கியம் கொள்ள முடியும். ஒருவன் இயேசுவை வணங்குகிறவராகவோ, நேசிக்கிறவராகவோ, துதிக்கி றவராகவோ அல்லது ஆராய்ந்து மகிழ்கிறவராகவோ இருக்கலாம். ஆயினும் இவை எதுவும் இறை தொடர்பையும் உறவையும் ஏற்படுத்தி விடாது. ஒருவர் தம்முடைய பாவ நிலைமையை உணர்ந்து, பாவவிமோசனம் பெறுவதற்க்காக இயேசுவிடம் வந்து இரட்சிப்பின் அனுபவம் பெற்றால்தான். தேவ உறவுடையவராக மாற முடியும். (யோவான்-1:12) மனிதர்களோடு இறை உறவை ஏற்படுத்தத்தானே இயேசு இந்த பூமியில் மனுவுருவானார்.

முதலாவது இயேசுவோடு நாம் இறை தொடர்பும் உறவும், உடையவர்களாக மாறி நமக்கு மிகவும் முக்கியமானவராக அவர் மாறவேண்டும். அதனுடைய விளைவாக பாவமன்னிப்பு பாவவிடுதலை, தேவஐக்கியம் சமாதானம், சந்தோஸம், பரிசுத்தமாகுதல், உயர்ந்த வாழக்கை முறை, நித்திய நம்பிக்கை, ஆகியவற்றை நன்மைகளாகப் பெற வேண்டும். இவ்விதம் உறவும் நன்மைகளும் பெற்றால்தான், இயேசுவின் பிறப்பை நாம் கொண்டாடுவதற்க்கு அர்த்தம் உண்டாகும்.

"அனைவருக்கும் கிறிஸ்துப்பிறப்பு நல் வாழ்த்துக்கள்"

- ***நெல்சன் சோபித ராஜ்.***

# உங்களுக்குத் தெரியுமா ?
## மரியாளின் பயணம்

**இ**யேசுவை கருவில் சுமந்த நிலையிலேயே யோசேப்புடன் மரியாள் நாசரேத்திலிருந்து பெத்லகேமிற்கு மூன்று நாள் பயணம் செய்ய வேண்டியதாயிற்று. இவர்களது பயணம் நாசரேத்திலிருந்து எஸ்டிரலோன் சமவெளி வழியாக சமாரியாவின் மலைகளை கடந்து பின்னர் யோர்தான் ஆற்றையும் பள்ளதாக்கையும் கடந்து எருசலேம் போக வேண்டும். மலைகளையும் ஆறுகளையும் பள்ளத்தாக்கையும் கடக்க வேண்டிய இப்பயணம் கடுமையனது. வழிகளில் குள்ள நரிகளும் நிறைய உண்டு. இதுவும் தவிர கூட்டம் கூட்டமாய் கொள்ளையர்களும் இந்த வழிகளில் உண்டு. இயேசுவை கருவில் ஏற்றவர்களும் மனதில் ஏற்றவர்களும் சோதனையான பாதைகளை கடக்கத்தான் வேண்டும் அல்லவா? இந்த பண்டிகை நாட்களில் இயேசுவை சுமந்த வண்ணமாக வெற்றி நடைபோடும் பாக்கியத்தை தேவன் நம் ஒவ்வொருவருக்கும் கிருபையாய் அருள வேண்டுவோம்.

M. Nesamony

"CHRISTMAS" is the spirit of giving without a thought of getting. It is happiness because we see joy in people. It is forgetting self and finding time for others. It is discarding the meaningless and stressing the true values.

# வேத வினா விடைப் போட்டி

(நீதிமொழிகள் 1 முதல் 15 முடிய)

1. வாது எதனால் உருவாகிறது?
2. அறிவு புத்தி இவற்றின் உறைவிடம் யாது?
3. கர்த்தருக்குப் பயப்படுவதால் நாம் எதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்?
4. ஞானிகளின் வார்த்தைகளின் ஆழங்களை யாருக்கு அறிந்து கொள்ள முடியும்?
5. உதடுகளை அடக்குகிறவன் யார்?
6. ஞானம், புத்தி இவற்றை எந்த உறவு முறையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சாலமோன் கூறுகிறார்?
7. நீதிமானின் பலன் என்ன?
8. சோம்பேறி எதை மாதிரியாகக் கொள்ள வேண்டும்?
9. எலும்புருக்கி நோய்க்கு சமம் யாது?
10. ஜீவ விருட்சத்திற்கு நிகராவது யாது?

குறிப்பு: விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இம்மாதம் 20 ம் தியதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

**நவம்பர் மாத விடைகள்** :

1. இஸ்ரவேலை (135:4)
2. சங்.127:4
3. சங். 150
4. சங். 133:2,3
5. சங்.128:3
6. நீதிமான்கள் சூழ்ந்து கொள்வார்கள் (142:7)
7. பாசான் (136:20)
8. செம்மையானவர்கள் (140:13)

9. சங். 139
10. எக்காளம், வீணை, சுரமண்டலம், தம்புரு, யாழ், தீங்குழல், கைத்தாளம் (150:5)

கடந்த மாத வேத வினா விடைப் போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்கள்:

1. திருமதி. பிப்லின் நெல்சன்
2. திருமதி. ஜெயின் ராஜவேல்
3. திருமதி. ஜெயந்தா ஜாண்
4. திருமதி. எபென் A..பிரசாத்.
5. திருமதி. சிந்துஜா சதீஷ்குமார்.

# வார்த்தை மாம்சமானது

*யோவான் 1:1 ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. 2 அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். 3 சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.*

*14 அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்;அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.* கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு ! இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். வார்த்தை மாம்சமாகி இயேசு கிறிஸ்துவாக பிறந்த நிகழ்வை உலகமெங்கும் கொண்டாடும் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் அன்பு வாழ்த்துக்கள். இந்த சமயத்தில், வார்த்தை மாம்சம் ஆனதன் அர்த்தம், முக்கியத்துவம், பலன்கள், நிகழ்வுகள் போன்ற சத்தியங்களை சற்று படிப்போம். **"அந்த வார்த்தை மாம்சமாகி"** – இது உலக சரித்திரத்தில் நிகழ்ந்த ஒரு உன்னத நிகழ்ச்சி. பாவத்தில் வீழ்ந்த மனுக்குலத்தை மீட்டெடுக்க தேவன் செய்த மகாப்பெரிய காரியம். எப்படி சம்பவிக்கும் என்று தேவதூதரும் உற்றுப்பார்க்க ஆசையாக இருந்த காரியம் ( *1 பேதுரு 1:12* ). பாவத்தை பற்றிய

அறிவு இருக்கிற அனைவரும் நித்திய நரகத்துக்குதான் செல்ல வேண்டும் என்று இருந்த நிலையை மாற்றி, இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிற யாரும் இனிமேல் நித்திய நரகத்துக்கு செல்ல தேவையில்லை என்ற ஒரு அற்புதமான நிலைமையை உருவாக்கிய காரியம் இது.

*1 யோவான் 4:2 தேவஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.*

*3 மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திகிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது. ( 2 யோவான் 1:7; எபி 5:7; பிலி 2:6-8; 1 தீமோ 3:16 )*மற்ற எந்த ஒரு மத போதனைகளிலும் இல்லாமல், கிறிஸ்தவத்தில் இருக்கும் ஒரு மகா முக்கியமான வேறுபாடு, **" நமக்கு ஒரு இரட்சகர் "** இருப்பது.இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் இரட்சகராக ஆவதற்கான ஒரு முக்கியமான

தகுதி - அவர் மாம்சத்தில் வெளிப்படுவது. இல்லையென்றால் அவர் மனுக்குலத்துக்காக சோதிக்கப்பட முடியாது, நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டிருக்க முடியாது, தண்டிக்கப்பட முடியாது, மரிக்க முடியாது – மனுக்குலத்துக்கான பிராயச்சித்த பலியாக முடியாது. அதனால்தான் இயேசு கிறிஸ்து மாம்சமானது சரித்திரத்தின் ஒரு அதி முக்கியமான சம்பவம்.

## வார்த்தை

நாம் பொதுவாக தமிழில் ***"வார்த்தை"*** என்று கூறும் சொற்களுக்காக வேதாகமத்தில், முக்கியமாக புதிய ஏற்பாட்டில் இரண்டு கிரேக்க வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

1. **Logos. லாகோஸ்.** இவ்வார்த்தை ஒரு ***"கருத்தை" "எண்ணத்தை"*** குறிப்பிடுகிறதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. உ.ம். ***லூக்கா 7:7; 1 கொரி 14;9,19;யோவான் 15:25; 1 தெச 4:15; அப் 8:25.***

2. **Rhema** ரேமா. ஒருகருத்தை அல்லது எண்ணத்தை, முறையான, இலக்கணப்பூர்வமான, அறிவுப் பூர்வமான வடிவத்தில், வார்த்தைகளிலும் வாக்கியங்களிலும் வெளிப்படுத்துவதை குறிப்பிடுவதற்காக உபயோகப்படுத் தப்பட்டுள்ளது. உ.ம். ***மத் 12:36; 2 கொரி 12:4; எபி 12:19; யோவா 3:34; அப்2:14.***

உதாரணத்துக்கு, வேதாகமத்தை குறிப்பிடுவதற்காக லாகோஸ் என்ற வார்த்தையை உபயோகப்படுத் தலாம்; வேதாகமத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட வசனத்தை குறிப்பிடுவதற்காக ரேமா என்ற வார்த்தையை உபயோகப்படுத்தலாம் ***( எபே 6:17 ).***

***யோவான் 1:1,14; 1 யோவான் 1:1; வெளி 19:13*** ஆகிய இடங்களில் **"வார்த்தை"** என்று குறிப்பிடப் பட்டுள்ள சொல்லுக்கான கிரேக்க வார்த்தை **"லாகோஸ்"** ஆகும். இந்த இடங்களில் இவ்வார்த்தை, தேவனுடைய குமாரனுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டுள்ள **"தனிப்பட்ட முறையிலான வார்த்தை"** என்ற பட்டப்பெயரை குறிப்பிடுகிறது.

**மாம்சம்:** இந்த வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை **"சார்க்ஸ்"** என்பதாகும் . இவ் வார்த்தை "மாம்சம்" என்று ***யோவான் 1:1,14; 1 தீமோ 3:16; 2 யோவா 7;எபி 5:7*** ஆகிய இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வார்த்தை இவ்விடங்களில், இயேசுகிறிஸ்துவின் "பரிசுத்தமனிதத்தன்மை" யையும் ஒரு மனிதன் என்று அழைக்கப்படுவதற்கு தேவையான அனைத்தையும் ( ஆவி, ஆத்துமா, சரீரம்) குறிப்பிடுகிறது. அதாவது தேவனுடைய குமாரன், பரிசுத்த மனிதத்தன்மையை முழுமையாக எடுத்துக்கொண்டு, ஆவி, ஆத்துமா, சரீரம் உள்ள ஒரு மனிதனாக ஆனார்


## வார்த்தை மாம்சமானது எதற்காக ?

**"பாவத்தை போக்கும் பலியாக"**

*ரோமர் 8:3* ***அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.*** புசிக்கக்கூடாது என்று தேவன் சொன்ன கனியை ஆதாம் புசித்ததால், மொத்த மனுக்குலமும் பாவிகள் ஆக்கப்பட்டனர் ***( ரோமர் 5:12-19 ).*** இதனால் பாவத்தை அறிகிற அறிவு வராமல் மரிக்கும் சிறு பிள்ளைகளை தவிர மற்ற அனைத்து மொத்த மனுக்குலமும் நித்திய நரகத்துக்கு செல்லுகிறவர்கள் ஆக்கப்பட்டார்கள். ஆனாலும் தேவன் தன் அநாதி தீர்மானத்தின் படி, இந்த பிரச்சினைக்கு தீர்வு காண உலகத்தொடக்கத்துக்கு முன்பே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக இயேசு கிறிஸ்துவை வைத்திருந்தார் ***( யாக் 1:19-20; வெளி 13:8 ).***

தொடரும்......

# Cartoon of the Month




---

Story of the Month

## How to Celebrate Christmas?

The days were getting shorter, and a chill was in the air. Another year had passed, and Christmas Day would soon be there. So Archie grabbed his piggy bank just like the year before, he wanted to buy presents for his family at the store. But somehow there was less this year than he had in the past. How could he get them presents? He must think of something fast. He counted up his coins, but Archie only had a few. He did not have enough to do the things he wished to do. Still Archie loved his family and he wanted them to know, but without lots of presents, how could Archie make it show? He thought about what Christmas was, and how it came to be. It did not start with shopping or finding the biggest tree. It started with a man and wife who traveled a long way. They had to sleep outside

because there was no place to stay. They stayed out in a stable on a cold and quiet night, and brought into the world a baby full of joy and light. They did not have much money, but they had a lot of love. They had a happy family with blessings from above. And though their gifts were not the kind to wrap and give away, no gift of greater worth can yet be given to this day. So Archie thought of Jesus and what Christmas means today. It truly was for giving. It had always been that way. But not all gifts are boxes topped with shining pretty bows.

What matters most is giving love and making sure it shows. So Archie did his best to make a special Christmas Day. He thought about his family in a new and giving way. He shoveled off the driveway where the snow had piled up deep. He made a lovely breakfast while his family was asleep. He fixed his sister's violin so she could play a song. He helped fix up the tree house, and he made it very strong. He did the chores for everyone, so they could get some rest. His gifts were from the heart, and that made them the very best. His family saw how much he cared with all that he had done. They thanked him for the special gifts that made their Christmas fun. He did not have much money to buy presents from the store. He did not buy so many things, the wayhe did before, but Archie learned what Christmas means, with money or without.

*To share the gift of love-*

*that is what Christmas is about.*


***CHILDREN IT IS YOUR PLACE NOW***

# The Birth of Jesus

## Luke 2:1-14 (NIV)

| | | | | |
|---|---|---|---|---|
| Joseph | Mary | Bethlehem | Baby | wrapped |
| watch | flocks | Inn | clothes | peace |
| born | manger | glory | room | shepherds |
| angel | appeared | afraid | sign | earth |

*Find out the above words from the below*



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | V | Q | S | J | K | S | K | E | U | R | B | X | T | V |
| B | R | A | R | N | W | A | H | R | B | O | O | O | Q | P |
| T | M | D | N | O | R | F | D | E | O | A | B | O | R | S |
| Y | A | I | N | G | A | B | E | K | P | V | B | G | M | N |
| I | R | V | T | L | P | F | Y | C | G | H | Q | Y | E | E |
| A | Y | Z | U | O | P | L | Z | J | O | S | E | P | H | G |
| A | N | W | Q | R | E | O | C | R | M | A | C | R | I | H |
| F | L | G | A | Y | D | C | S | L | P | A | F | B | D | V |
| R | V | P | E | T | Q | K | I | K | O | E | N | Q | Q | S |
| A | G | M | U | L | C | S | G | M | C | T | A | G | Z | J |
| I | O | N | D | H | X | H | N | F | W | F | H | C | E | N |
| D | Z | J | T | W | N | M | J | F | J | J | W | E | E | R |
| V | P | R | A | P | P | E | A | R | E | D | R | A | S | J |
| H | A | D | H | U | N | B | E | T | H | L | E | H | E | M |
| E | H | O | U | F | D | O | M | H | S | R | D | Z | F | S |



## *QUIZ for the Month*

### THE GOSPEL ACCORDING TO LUKE (Chapters 1 to 5)

1. Who is the son of Zacharias and Elizabeth?
   - a) Jesus
   - b) John
   - c) Luke
   - d) Mark

2. Who is blessed among women as per Angel Gabriel?
   - a) Elisabeth

b) Mary
c) Ruth
d) Esther

3. Good tidings of great joy “Savior is born for you” is first informed by angel to whom?
   a) Casesar Augustus
   b) Heord, the King of Judea
   c) Zacharias
   d) Shepherds living out in the fields

4. Who said “My eyes have seen God’s salvation?
   a) Simeon
   b) Joseph
   c) Maggie
   d) Shepherd

5. According to John, Jesus will baptize with ___________
   a) Holy Spirit
   b) Fire
   c) Both (a) and (b)
   d) Water

6. At what age Jesus began His ministry?
   a) About 33.5 Years
   b) About 15 Years
   c) About 34 Years
   d) About 30 Years

7. Devil tested / tempted Jesus with
   a) Bread / Food
   b) Kingdoms of the World
   c) Authority / Glory
   d) All of the above

8. Jesus said “No __________ is accepted in his own country”.
   a) Physician

b) Prophet
c) Fisher man
d) Judge

9. When Simon Peter, John and James got fish full of boats, what did they do?
   a) Sold everything and became rich
   b) Shared with Jesus
   c) Forsook all and followed Jesus
   d) Went again to catch fish

10. Who is having power on earth to forgive sins?
   a) Son of Man
   b) Satan
   c) Angel
   d) Disciple of Jesus

***N.B: Dear Children, please indicate the chapter and verses against your answers and submit before 20 th of this month***

## *NAMES OF CHILDREN WHO ANSWERED NOVEMBER QUIZ.*

1. Annlin Sophia Nelson
2. Angelin Sophia Nelson
3. Dennis Roger
4. Johan Sanjo
5. Jesvin Selvakumar
6. Diniya Sunshine

***Congrats you have done all!!***

**CORRECT ANSWERS:**

**1**. c) The Great Tribulation

2. d) 144,000
3. a) The evildoer next to him on the stake
4. d) Moses
5. c) Methusela
6. b) Noa
7. c) Turned water into wine
8. c) Go and make disciples of people of all the nations
9. b) Joseph of Arimathea
10. d) Nazareth

# The Gold Wrapping Paper

Once upon a time, there was a man who worked very hard just to keep food on the table for his family. This particular year a few days before Christmas, he punished his little five-year-old daughter after learning that she had used up the family's only roll of expensive gold wrapping paper.

As money was tight, he became even more upset when on Christmas Eve he saw that the child had used all of the expensive gold paper to decorate one shoebox she had put under the Christmas tree. He also was concerned about where she had gotten the money to buy what was in the shoebox.

Nevertheless, the next morning the little girl, filled with excitement, brought the gift box to her father and said, "This is for you, Daddy!"

As he opened the box, the father was embarrassed by his earlier overreaction, now regretting how he had punished her.

But when he opened the shoebox, he found it was empty and again his anger flared. "Don't you know, young lady," he said harshly, "when you give someone a present, there's supposed to be something inside the package!"

The little girl looked up at him with sad tears rolling from her eyes and whispered: "Daddy, it's not empty. I blew kisses into it until it was all full."

The father was crushed. He fell on his knees and put his arms around his precious little girl. He begged her to forgive him for his

unnecessary anger.

An accident took the life of the child only a short time later. It is told that the father kept this little gold box by his bed for all the years of his life. Whenever he was discouraged or faced difficult problems, he would open the box, take out an imaginary kiss, and remember the love of this beautiful child who had put it there.

In a very real sense, each of us has been given an invisible golden box filled with unconditional love and kisses from our children, family, friends and God. There is no more precious possession anyone could hold.

## விடி வெள்ளி நட்சத்திரம்

டிசம்பர் மாதம் வந்து விட்டாலே எல்லோருக்கும் அதிக மகிழ்ச்சி, சந்தோஷம். காரணம், இது கிறிஸ்மஸ் மாதம். இயேசு கிறிஸ்து நமக்காகவும், உலக மக்களுக்காகவும் எல்லோரையும் இரட்சிப் பதற்காக 2000-ஆம் வருடங்களுக்கு முன்பு பெத்லகேமில் மாட்டுத் தொழுவத்தில் பாலகனாக பிறந்த நாளை பண்டிகையாக ஆசரிப்பதால்.

நாம் வீட்டை சுத்தப் படுத்தி வெள்ளை அடிக்கிறோம், பல விதமான வர்ண காகிதங்களால் அலங்கரிக்கிறோம். இதில் நட்சத்திரத்திற்கு முக்கிய பங்கு உண்டு. கிறிஸ்மஸ் பண்டிகையோடு நட்சத்திரமும் ஒன்றாய் இணைந்து விட்டது. எல்லா வீடுகளுக்கும் முன்பாக நட்சத்திரம் தொங்க விட்டிருப்பதைக் காணலாம். அதற்குள்ளே ஒரு மின்சார பல்பு எரிந்து வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருக்கும். அதை பார்த்ததும் இது ஒரு கிறிஸ்தவ வீடு என்று அனைவரும் அடையாளம் கண்டு கொள்வார்கள். அது போல் "அவர்க்கள் அந்த்த நட்ச்சத்த்திரத்தை கண்ட்ட போது, மிகுந்த்த ஆனந்த்த சந்தோஷமடைந்தார்கள்" (மத் 2:10) நம்முடைய ஆண்டவரும் கூட நட்சத்திரம் என்று அழைக்கப்பட்டார். அவரே இதை சொல்லுகிறார். "நான் தாவீதின் வேரும், சந்ததியும், பிரகாசமுள்ள்ள விடி வெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன்" என்றார் (வெளி 22:16) ஒரு நாள் கர்த்தர் ஆபிரகாமை வெளியே அழைத்து: "நீ வானத்தை அண்ணாந்து பார் பார், நட்சத்திரங்களை எண்ண

உன்னாலே கூடுமானால் ,அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்" என்றறார். (ஆதி 15::5) மாமிசக் கண்களால் ஆபிரகாம் பார்த்த போது இலட்சக்கணக்கான நட்சத்திரங்களை அவர் பார்த்திருக்கக்கூடும். அதே நட்சத்திரங்களை விசுவாசக் கண்களோடு ஆபிரகாம் பார்த்த போது தேவன் தனக்கு தரப்போகிற இலட்சக்கணக்கான குழந்தைகளாக ஆபிரகாமின் சந்ததியாக கண்டிருந்திருக்கக்கூடும்.

அதே நட்சத்திரங்களை ஆவிக்குரிய கண்களால் ஆபிரகாம் பார்த்த போது நித்தியத்தை சுதந்தரிக்கிற ஆபிரகாமின் சந்ததியாகிய பரிசுத்தவான்களாக அவருடைய கண்கள் கண்டிருந்திருக்கும். சாஸ்திரிகளும் நட்சத்திரத்தைப் பார்த்தார்கள். அது அவர்களை ஒழுங்காக பெத்லகேம் பாலகனிடத்தில் கொண்டுவந்தது. ஆனால் நட்சத்திரத்தை பின் பற்றி வந்த அவர்கள் வழியில் தங்கள் சொந்த யோசனைக்கும், சிந்தைக்கும் இடங்கொடுத்து ராஜகுமாரன் ராஜாவின் அரண்மனையில் தான் பிறப்பான் என்று எண்ணி ஏரோதின் அரண்மனைக்குள் சென்றதால் எத்தனை இளம் ஆண்பிள்ளைகள் வீணாக மரிக்க வேண்டியதாயிற்று. அன்பானவர்களே, நமது சித்தத்தின் படி அல்ல, தேவ சித்தத்தையே நாம் பின்பற்ற வேண்டும், கீழ்படிய வேண்டும்.

சாஸ்திரிகள் கண்ட நட்சத்திரம் குழந்தை இயேசுவண்டை அவர்களை வழி நடத்தியது. இன்று விடி வெள்ளி நட்சத்திரமான கிறிஸ்து நம்மை தமது மகிமையான வருகையை நோக்கி வழி நடத்துகிறார். அல்லேலுயா! அந்த விடி வெள்ளி நட்சத்திரமாகிய கிறிஸ்து நமது உள்ளத்தில் பிறந்து விட்டாரா? ஆவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருடைய பிள்ளையாக சாட்சியாக ஜீவித்துக் கொண்டு வருகிறோமா? இன்னும் உள்ளத்தில் பிறக்கவில்லை என்றால், அவர் பிறக்க இன்றே இப்பொழுதே உள்ளத்தில் இடம் கொடுப்போமா! அந்த பூரணமான விடி வெள்ளி நட்சத்திரமாகிய இயேசு கிறிஸ்து நம்முடைய உள்ளத்தில் பிறப்பது தான் உண்மையான கிறிஸ்துமஸ். உண்மையான கொண்டாட்டம். அதுவே மிகுந்த ஆனந்த சந்தோஷத்தை நமக்குள் கொண்டு வருகிறது.

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்"(லூக் 2:11).

***M.* நேசமணி**

**Family place**

## EMBRACING IMPERFECTIONS

When I was a little girl, my mom liked to make breakfast food for dinner every now and then. And I remember one night in particular when she had made breakfast after a long, hard day at work.

On that evening so long ago, my mom placed a plate of eggs, sausage, and extremely burned toast in front of my dad. I remember waiting to see if anyone noticed! Yet all my dad did was reach for his toast, smile at my mom, and ask me how my day was at school.

I don't remember what I told him that night, but I do remember watching him smear butter and jelly on that toast and eat every bite! When I got up from the table that evening, I remember hearing my mom apologize to my dad for burning the toast. And I'll never forget what he said. 'Baby, I love burned toast.'

Later that night, I went to kiss Daddy good night, and I asked him if he really liked his toast burned. He wrapped me in his arms and said: 'Debbie, your Momma put in a hard day at work today and she's really tired. And besides-a little burnt toast never hurt anyone! You know, life is full of imperfect things...and imperfect people. I'm not the best housekeeper or cook.'

What I've learned over the years is that learning to accept each other's faults - and choosing to celebrate each other's differences - is the one of the most important keys to creating a healthy, growing, and lasting relationship. Burnt toast should never be a deal breaker. We could extend this to any relationship in fact - as understanding is the base of any relationship, be it a husband-wife or parent-child or friendship!!"

**Don't put the key to your happiness in someone else's pocket - but into your own. People will always forget what**

**you do, and they will always forget what you say,but they will never, ever forget the way you make them feel...**

**When the perfection (LOVE) comes, the imperfection disappears-**(1Cor.13:10)

Good reminder, don't you think?

## WEDDING ANNIVERSARIES DEC 2017


| | | |
|---|---|---|
| 27-12-17 | Mr.Selvistor Solomon<br>Mrs.Manjushah | 055 931 8750 |
| 28-12-17 | Mr.Herchil Harish<br>Mrs.Blessy Grace Jonish Herchil | 056 252 4659 |
| 29--12-17 | Dr. Alexis Joy<br>Mrs.Padma Alexix Joy | 050 583 8826 |
| 29--12-17 | Mr.M.Nesamony<br>Mrs.Hepsibai Nesamony | 050 523 7237 |
| 29--12-17 | Mr.P. Davidraj<br>Mrs.Vasantha Davidraj | 050 832 8013 |
| 29--12-17 | Mr. Derin Joy<br>Mrs. Fanny Esther | 055 553 5200 |



# Birthday Celebrants December – 2017

வருடத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர். உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது. (சங்.65:11)

| | | |
|---|---|---|
| 2-12-17 | Miss.Angelin Shophia Nelson | 055 602 8865 |
| 3-12-17 | Dr. Alexis Joy | 050 583 8826 |
| 4-12-17 | Mr.Abishek Davidraj | 050 832 8013 |
| 13-12-17 | Mr.Richard Ravindra | 056 885 2900 |
| 19-12-17 | Mr.Augustin Justin | 055 619 9268 |
| 24-12-17 | Master.Rishon Yojit | 055 814 6143 |
| 27-12-17 | Master.Shelbino Paul | 056 394 1817 |
| 28-12-17 | Mrs.Prasanna Aruldhas | 055 676 3719 |
| 31-12-17 | Miss.Angeline Shally | 050 543 1241 |
| 31-12-17 | Mr.Sathish Kumar.T | 055 814 6143 |



# DAILY BIBLE READING - DECEMBER - 2010

"Your word is a lamp to my feet and light for my path"

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | Fri | Luke 15 | Micah 6 |
| 2 | Sat | Luke 16 | Micah 7 |
| 3 | Sun | Luke 17 | Nahum 1 |
| 4 | Mon | Luke 18 | Nahum 2 |
| 5 | Tue | Luke 19 | Nahum 3 |
| 6 | Wed | Luke 20 | Habakkuk 1 |
| 7 | Thus | Luke 21 | Habakkuk 2 |
| 8 | Fri | Luke 22 | Habakkuk 3 |
| 9 | Sat | Luke 23 | Zephaniah 1 |
| 10 | Sun | Luke 24 | Zephaniah 2 |
| 11 | Mon | John 1 | Zephaniah 3 |
| 12 | Tue | John 2 | Haggai 1 |
| 13 | Wed | John 3 | Haggai 2 |
| 14 | Thus | John 4 | Zechariah 1 |
| 15 | Fri | John 5 | Zechariah 2 |
| 16 | Sat | John 6 | Zechariah 3 |
| 17 | Sun | John 7 | Zechariah 4 |
| 18 | Mon | John 8 | Zechariah 5 |
| 19 | Tue | John 9 | Zechariah 6 |
| 20 | Wed | John 10 | Zechariah 7 |
| 21 | Thus | John 11 | Zechariah 8 |
| 22 | Fri | John 12 | Zechariah 9 |
| 23 | Sat | John 13 | Zechariah 10 |
| 24 | Sun | John 14 | Zechariah 11 |
| 25 | Mon | John 15 | Zechariah 12:1 - 13:1 |
| 26 | Tue | John 16 | Zechariah 13:2-9 |
| 27 | Wed | John 17 | Zechariah 14 |
| 28 | Thus | John 18 | Malachi 1 |
| 29 | Fri | John 19 | Malachi 2 |
| 30 | Sat | John 20 | Malachi 3 |
| 31 | Sun | John 21 | Malachi 4 |

# CSI Tamil Parish – Al Ain
# December 2017 Programs

| Date | Program | Time | Venue |
|---|---|---|---|
| 1-12-2017 | Communion Service | 0700 PM | Main Hall |
| 8-12-2017 | Junior Church Anniversary | 0700PM | Main Hall |
| 10-12 -2017 to 13-12-2017 | Carol Rounds | Starts@ 0630 everyday | Visiting Houses |
| 15-12-2017 | Christmas Carol Service (Ecumenical ) | 0700 PM | Main Hall |
| 22-12-2017 | Christmas Tree & Family Singing | 0700PM | Main Hall |
| 25-12-2017 | Christmas Service | 0530 AM | Main Hall |
| 29 -12-2017 | Regular Service | 0700 PM | Main Hall |
| 31-12-2017 | Watch Night Service | 1130 PM | Portacabin |

"Want to keep Christ in Christmas? Feed the hungry, clothe the naked, forgive the guilty, welcome the unwanted, care for the ill, love your enemies, and do unto others as you would have done unto you."

# ஜெபிப்போம் !!!!

• ஆயர் திருச்சபைக்காரியக்குழு திருச்சபை உறுப்பினர்களுக்காக

• வருகிற கிறிஸ்து பிறப்பு மிக ஆசீர்வாதமாக அமையவும் புத்தாண்டை தேவன் ஆசீர்வதித்துத் தரும்படியாகவும்

• உலகத்திருச்சபைகளுக்காகவும் சிறப்பாக ஐக்கிய அரபுக் குடியரசு மற்றும் வளைகுடா பகுதியிலுள்ள அனைத்து திருச்சபை களுக்காகவும் ஊழியங்களுக்காகவும்

• பேராயர்கள் போதகர்கள் ஊழியர்களுக்காக

• நம் திருச்சபையின் இதர ஊழியங்களுக்காக

• இம்மாதத்தில் நடைபெறும் எல்லா ஆராதனைகளையும் கூடுகை களையும் தேவன் ஆசீர்வதித்திட

• புதிய அங்கத்தினர்களை தேவன் நம் சபைக்கு தருமாறு

• நம் திருச்சபையின் அங்கத்தினர் அனைவருக்காகவும் நம்குடும்பங் களை ஆண்டவர் ஆசீர்வதிக்கவும் ஆண்டவரால் பத்திரமாக பாதுகாக்கப்படவும்

• விசாவுக்காக வேலைக்காக ஊதியத்திற்காக காத்திருக்கும் மக்க ளுக்கு ஆண்டவர் சரியான நேரத்தில் அவைகளை வழங்கும்படியாக

• தனிமையாய் இந்த தேசத்திலிருக்கும் நம் திருச்சபையின் உறுப்பினர்களுக்காகவும் குறிப்பாக தங்கள் பெற்றோர் மனைவி பிள்ளைகளை விட்டு கேம்ப்களில் தங்கியிருக்கும் நம் அன்பு சகோதரர்களுக்காகவும் அவர்களின் பெற்றோர் மனைவி பிள்ளைகள் சகோதர சகோதரிகள் அனைவருக்காகவும்

• நமது திருச்சபை தாங்கும் நமது மிஷனரிகளான **திரு. கிறிஸ்டோபர் திரு. சூரிய பால் சதா** அவர்களுக்காகவும் அவரது குடும்பம் மற்றும் ஊழியங்களை தேவன்
ஆசீர்வதித்திட ஜெபிப்போம்.